Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 92/2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 1

| | | | |
|---|---|---|---|
| Name: | லாவண்யா | Calling: | சூ கம்பெனி |
| Father's Name: | காசி | Religion: | |
| Village: | கோணாமேடு | Age: | 34 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 24.03.2026 நேரம் : 02.35 PM

( 3 எதிரி ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. இரண்டாம் எதிரி விசாரணையின் போது நீதிமன்ற காவலில் இருந்தார். 4ம் எதிரி இறந்துவிட்டார். அவருக்கு எதிரான வழக்கு அற்றுபோய் விட்டது. 1ம் எதிரி தரப்பில் குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 1 முதன்மை விசாரணை

ஆஜர் எதிரி லட்சுமியை தெரியும். இவ்வழக்கின் மற்ற எதிரிகளான முருகன் என்கிற கானா முருகன், செல்வமணி, இறந்துவிட்ட சரஸ்வதியை தெரியும். எனது எதிர்வீட்டுகாரர்கள். கடந்த 8 வருடங்களுகசு முன்பு தெருவில் சண்டை நடந்தது. அந்த சண்டையில் என்னை யாரோ அடித்துவிட்டார்கள். யார் என தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதை அந்த சண்டையில் நான் மயக்கம் ஆகி மருத்துவமனையில் இருந்த போது போலிசார் என்னிடம் வாங்கினார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு

தெரியாது. **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் நிகழ்நிலை புகார்தாரர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதை நான் எதிரிகளுடன் சமாதானமாக போவதற்காக போட்டுக்கொடுத்தேன். என்னை யாரும் கட்டாயபடுத்தவும் இல்லை, மிரட்டவும் இல்லை. **அந்த சமாதான மனு அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

சம்பவத்தின் போது கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் தான் யாரோ என்னை அடித்தார்கள் என்றால் சரிதான். அதனால் தான் நான் மயக்கமாக இருந்தேன் என்றாலும் அப்போது மருத்துவமனையில் போலிசார் வந்து மயக்கத்தில் இருந்ததால் எழுதப்படாத வெள்ளை தாளில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) லாவண்யா

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC. No. 92/2025

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 2

| | | | |
|---|---|---|---|
| Name: | கார்த்திக் | Calling: | கம்பி வேலை |
| Father's Name: | முனிரத்தினம் | Religion: | |
| Village: | கோணாமேடு | Age: | 40 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 24.03.2026 நேரம் : 02.45 PM

( 3 எதிரி ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. இரண்டாம் எதிரி விசாரணையின் போது நீதிமன்ற காவலில் இருந்தார். 4ம் எதிரி இறந்துவிட்டார். அவருக்கு எதிரான வழக்கு அற்றுபோய் விட்டது. 1ம் எதிரி தரப்பில் குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 2 முதன்மை விசாரணை

ஆஜர் எதிரி லட்சுமியை தெரியும். இவ்வழக்கின் மற்ற எதிரிகளான முருகன் என்கிற கானா முருகன், செல்வமணி, இறந்துவிட்ட சரஸ்வதியை தெரியும். எனது எதிர்வீட்டுகாரர்கள். கடந்த 8 வருடங்களுகடு முன்பு தெருவில் ஏதோ சண்டை நடந்துள்ளது. அந்த சமயத்தில் நான் வேலைக்கு சென்றிருந்தேன். அப்போது என் மனைவி மயக்கம் அடைந்ததாக எனக்கு தகவல் சொன்னார்கள். வந்து பார்த்தபோது என் மனைவி மயக்கமாக இருந்தார். பிறகு மருத்துவமனைக்கு சென்றோம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

சம்பவத்தின் போது வேலைக்கு சென்றிருந்தால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதும் வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) கார்த்திக்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 92/2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 3

| | | | |
|---|---|---|---|
| Name: | சீனிவாசன் | Calling: | சூ கம்பெனி |
| Father's Name: | முனிரத்தினம் | Religion: | |
| Village: | கோணாமேடு | Age: | 50 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 24.03.2026 நேரம் : 02.50 PM

( 3 எதிரி ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. இரண்டாம் எதிரி விசாரணையின் போது நீதிமன்ற காவலில் இருந்தார். 4ம் எதிரி இறந்துவிட்டார். அவருக்கு எதிரான வழக்கு அற்றுபோய் விட்டது. 1ம் எதிரி தரப்பில் குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 2 முதன்மை விசாரணை

ஆஜர் எதிரி லட்சுமியை தெரியும். இவ்வழக்கின் மற்ற எதிரிகளான முருகன் என்கிற கானா முருகன், செல்வமணி, இறந்துவிட்ட சரஸ்வதியை தெரியும். எனது எதிர்வீட்டுகாரர்கள். கடந்த 8 வருடங்களுககு முன்பு தெருவில் ஏதோ சண்டை நடந்துள்ளது. அந்த சமயத்தில் நான் வேலைக்கு சென்றிருந்தேன். மாலை வந்து பார்த்தபோது என் தம்பி மனைவிக்கு மயக்கம் வந்து மருத்துவமனையில் இருந்தார். எதனால் அவ்வாறு மயக்கம் வந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

சம்பவத்தின் போது வேலைக்கு சென்றிருந்தால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதும் வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சீனிவாசன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC. No. 92/2025

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 4

| | | | |
|---|---|---|---|
| Name: | தம்பிதுரை | Calling: | உதவி ஆய்வாளர் |
| Father's Name: | மாதப்பன் | Religion: | |
| Village: | தர்மபுரி | Age: | 30 |
| Taluk: | தர்மபுரி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 24.03.2026 நேரம் : 02.55 PM

( 3 எதிரி ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. இரண்டாம் எதிரி விசாரணையின் போது நீதிமன்ற காவலில் இருந்தார். 4ம் எதிரி இறந்துவிட்டார். அவருக்கு எதிரான வழக்கு அற்றுபோய் விட்டது. 1ம் எதிரி தரப்பில் குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 4 முதன்மை விசாரணை

இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. தன்வீர் அகமது என்பவருக்காகவும் உதவி ஆய்வாளர் திரு. பிரகாசம் என்பருக்காகவும் சேர்த்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவும் அவர்கள் தாயரித்த ஆவணங்களை இந்த சாட்சியம் மூலம் குறியீடு செய்யவும் கற்றறிந்த எதிரிகளின் தரப்பு வழக்கறிஞர் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

நான் தற்போது வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.01.2019 ம் தேதி வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் திரு.பிரகாசம்

அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் வந்த இன்டிமேசனை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த லாவண்யா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார். **அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின் நிலையம் சேர்ந்து அதன்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 56/2019 சட்டப்பிரிவுகள் 294(பி), 323,324,506(2) IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டார்.

பின்னர் அவரே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று 26.01.2019 13.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ஏகாம்பரம், சர்தார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ 5 மற்றும் அ.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் லாவண்யா, கார்த்திக், சீனிவாசன், சுரேஷ்பாபு, சரண்யா மற்றும் மகசர் சாட்சிகள் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரி செல்வமணி என்பவரை 26.01.2019 ம் தேதி கோணாமேடு அம்பேத்கார் சிலை அருகே கைது செய்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்னர் இவ்வழக்கில் மற்றொரு எதிரிகளான லட்சுமி, சரஸ்வதி ஆகியோர்களை 27.01.2019 ம் தேதி கோணாமேடு சர்ச் அருகே முறைப்படி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். இவ்வழக்கில் 1 ம் எதிரி முருகன் என்கிற கானாமுருகன் மாண்புமிகு வேலூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்ய இயலவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட நபர் லாவண்யா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.தன்வீர் அகமது என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்றிதழ் பெற்றார். **லாவண்யாவின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது 294(பி), 323,324, 506(2) IPC இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். அவரது

விசாரணையில் சாட்சிகள் அனைவரும் பிரிவு 161(3) குவிமுச ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

மருத்துவமனையில் மயக்கமாக இருந்த அ.சா.1 இடம் வெற்றுதாளில் கையொப்பம் வாங்கிக்கொண்டு இவ்வழக்கின் புகார் ஆவணம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவயிடம் செல்லாமல் சாட்சிகளை விசாரிக்காமல் வழக்கின் சான்றாவணங்களை காவல் நிலையத்திலே வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சரியாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) தம்பிதுரை

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K